இந்து தமிழ் திசை 4 BANGALORE வியாழன், செப்டம்பர் 12, 2024 ஊர்வலம்

## சின்னச் சின்னதாய்...



தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி சரக எறிபந்து போட்டியில் வெற்றிபெற்ற ஸ்டான்லி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவர்களுடன் பள்ளி தாளாளர் வி.முருகேசன் உள்ளிட்டோர்.

### மாவட்ட எறிபந்து போட்டிக்கு ஸ்டான்லி பள்ளி மாணவர்கள் தகுதி

● அரூர்

தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி ஸ்டான்லி பள்ளி மாணவர்கள் மாவட்ட அளவிலான எறிபந்து போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

பாப்பிரெட்டிப்பட்டி சரக அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகிறது. இப்போட்டிகளில், சரக அளவில் உள்ள அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவ, மாணவியர் பங்கேற்று விளையாடி வருகின்றனர்.

இதில், குழு விளையாட்டுப் போட்டிகளில் பாப்பிரெட்டிப்பட்டி ஸ்டான்லி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் எறிபந்து போட்டியில் பங்கேற்றனர். 14 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் மற்றும் 19 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவுகளில் இப்பள்ளி மாணவர்கள் முதலிடம் பெற்றனர். மேலும், இவர்கள் மாவட்ட அளவிலான போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

வெற்றி பெற்ற மாணவர்களையும், பயிற்சி அளித்த உடற்கல்வி ஆசிரியர்கள் ஆர்.சத்யராஜ், எம்.ஆனந்தகுமார், திவ்யா ஆகியோரையும் பள்ளி தாளாளர் வி.முருகேசன், செயலாளர் எம்.பிருஆனந்த்பிரகாஷ் மற்றும் ஆசிரியர்கள் பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர்.



விலைவாசி உயர்வைக் கண்டித்து தருமபுரி பிஎஸ்என்எல் அலுவலகம் அருகில் இந்திய கம்யூனிஸ்ட் மாவட்ட செயலாளர் கலைச்செல்வம் தலைமையில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் தேவராசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### கிருஷ்ணகிரி காவலர் குடியிருப்பு துர்க்கையம்மன் கோயிலில் நவசண்டி மகா யாகம்

● கிருஷ்ணகிரி

கிருஷ்ணகிரி காவலர் குடியிருப்பில் உள்ள முத்து விநாயகர் துர்க்கையம்மன் கோயிலில், நவ சண்டி மகா யாகம் நேற்று நடந்தது.

இதையொட்டி, நேற்று முன்தினம் சிறப்பு பூஜைகளும், சண்டிகாதேவி ஆவாஹணம், சண்டி நவாவரண பூஜையும், இரவு பூர்ணாஹூதி, தீபாராதனையும், 64 யோகினி, 64 பைரவர் பூஜை, பலிதானங்களும் நடந்தன.

நேற்று காலை 7 மணிக்கு இரண்டாம் கால யாக பூஜை தொடங்கியது. இதில், மஞ்சள் கிழங்கு, குங்குமம், புடவை, வேட்டி, மட்டை தேங்காய், மூலிகைப் பொருட்கள், நெய், தேன், நெல் உள்ளிட்ட 25 வகையாக பொருட்களைக் கொண்டு, பிரதான 13 அத்யாய ஹோமங்களும், கோமாதா, பிரம்மசாரி, கன்யா, சுவாசினி வடுக பூஜைகளும் நடந்தன.

பகல் 12 மணிக்கு, அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், பூஜைகள் நடந்தன. இதையொட்டி, பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.ஏற்பாடுகளை விழா குழுவினர் மற்றும் ஊர் மக்கள் செய்திருந்தனர்.



தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் தேவராஜ பாளையம் பகுதியைச் சேர்ந்த கோவிந்தராஜ் மனைவி ஆர்த்தி (24) என்பவர் நேற்று உடலில் காயங்களுடன் வீட்டில் உயிரிழந்து கிடந்தார். அவரது இறப்பில் மர்மம் இருப்பதாகவும், நடவடிக்கை எடுக்கவும் கோரி உறவினர்கள் நேற்று பாப்பிரெட்டிப்பட்டி காவல் நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# தே.கோட்டை அருகே சிறுத்தைகள் நடமாட்டம் 10 சிசிடிவி கேமரா பொருத்தி கண்காணிப்பு

● ஓசூர்

தேன்கனிக்கோட்டை அருகே பாறை குகையில் பதுங்கி உள்ள சிறுத்தைகளின் நடமாட்டத்தை 10 சிசிடிவி கேமராக்களைப் பொருத்தி வனத்துறையினர் கண்காணித்து வருகின்றனர்.

தேன்கனிக்கோட்டை அருகே இஸ்லாம்பூர் கிராமத்தில் பாறை குகையில் கடந்த ஆகஸ்ட் மாதம் சிறுத்தை ஒன்று பதுங்கி இருந்தது. மேலும், சிறுத்தை பகல் மற்றும் இரவு நேரங்களில் அப்பகுதியில் உள்ள நாய்கள் மற்றும் ஆடுகளைக் கடித்துக் கொன்றது.

சிறுத்தையைக் கூண்டு வைத்துப் பிடிக்க வனத்துறையினர் நடவடிக்கை எடுத்தனர். ஆனால், சிறுத்தை கூண்டில் சிக்காமல் அடர்ந்த வனப்பகுதிக்குள் சென்றது. இந்நிலையில், கடந்த சில நாட்களுக்கு முன்னர் இரு சிறுத்தைகள் பாறை குகையில் பதுங்கின.

தகவல் அறிந்து அங்கு வந்த வனத்துறையினர் சிறுத்தை நடமாட்டத்தைக் கண்காணிக்க மீண்டும் அப்பகுதியில் கூண்டு வைத்தனர். ஆனாலும், கூண்டில் சிறுத்தை சிக்காத நிலையில் 10 சிசிடிவி கேமராக்கள் பொருத்தி சிறுத்தையின் நடமாட்டத்தைக் கண்காணித்து வருகின்றனர்.

இதுதொடர்பாக வனத்துறையினர் கூறியதாவது:

இஸ்லாம்பூர் பகுதியில் மல்லசந்திரம், தண்டரை, ஜே.காரப்பள்ளி ஊராட்சி பகுதியில் வருவாய்த் துறைக்குச் சொந்தமான சுமார் 200 ஏக்கர் நிலம் உள்ளது. இங்கு மரம், செடிகள் மற்றும் பாறை குகைகள் அதிகம் உள்ளன.

இதனால், சிறுத்தை இங்கு வந்து பழகிவிட்டதால் இந்த பகுதியைத் தனது வாழ்விடமாக மாற்றிக் கொண்டு தனக்கு தேவையான இரையை தேடிக்கொள்கின்றன.

இந்த 3 ஊராட்சிகளுக்குள் மாறி மாறி சிறுத்தைகள் இடம் பெயர்ந்து நாய்களை அடித்துக் கொன்று வருகிறது. சிறுத்தைகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்க அப்பகுதியில் 10 இடங்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொறுத்தப்பட்டுள்ளன. அதேபோல, நிரந்தமாக கூண்டும் வைத்துள்ளோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

> 3 ஊராட்சிகளுக்குள் மாறி மாறி சிறுத்தைகள் இடம் பெயர்ந்து நாய்களை அடித்துக் கொன்று வருகிறது.


IN THE COURT OF THE DISTRICT AND SESSION JUDGE BENGALURU RURAL DISTRICT AT BENGALURU

**REGULAR APPEAL NO. 123/2023**

**BETWEEN:** Sri. Chalasani Kutumba Rao, ...Appelllant

**AND:** Smt. Puspha and others ...Respondent

**REGULAR APPEAL SUMMONS TO THE RESPONDENT**

**S.V.Ashok Reddy,** S/o S.N.Venkataswamy Reddy, Aged about 61 years, R/at, No.178, Sulikunte Village, Varthur Hobli, Bengaluru East Taluk, Bengaluru-560078

Whereas the appellant herein has instituted regular appeal against one Smt. Puspha and six others, challenging the judgement and decree passed in O.S.No.1919/2014, dated 6/7/2023 on the file of Principal Senior Civil Judge Bengaluru Rural District, at Bengaluru and that you are arrayed as respondent No.3 in the above Regular Appeal, and you are hereby summoned to appear before this court in person or by a pleader duly instructed and able to answer all material questions relating to the above appeal on **25/10/2024, at 11: A.M.** On your failure to appear on the above said date, the case will be determined ex-parte against you.

Given under my hand and the seal of the court on this 05th day September of Two Thousand Twenty Four, at Bengaluru.

BY ORDER OF THE COURT
Sd/- Chief Administrative Officer
District & Session Court
Bangalore Rural District, Bengaluru

**Advocate for Appellant V N Kumar Advocate,** O/at. No.1 Greenfield, Immadhalli, Whitefield, Bengaluru-560066 Mob:9845462353


## ஒகேனக்கல் சுற்றுலா தலத்தில் மேம்பாட்டுப் பணிகளை ஆட்சியர் ஆய்வு

● தருமபுரி

தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் சுற்றுலா தலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டு பணிகளை மாவட்ட ஆட்சியர் நேற்று ஆய்வு செய்தார்.

பென்னாகரம் ஒன்றியம் ஒகேனக்கல் சுற்றுலா தலத்தை நவீன முறையில் மேம்படுத்தும் வகையில் 3.10 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் நுழைவு வாயில், பார்வையாளர் மாடம், பரிசல் நிறுத்துமிடம், எண்ணெய் குளியலுக்கான இடங்கள், உடை மாற்றும் அறை, சொகுசு நடைபாதை, எண்ணெய் கழிவு சுத்திகரிப்பு நிலையம், காட்சிக் கோபுரம் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், அண்மையில் ஒகேனக்கல் காவிரியாற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின்போது ஏற்பட்ட பாதிப்புகளை சீரமைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவற்றை மாவட்ட ஆட்சியர் சாந்தி நேற்று நேரில் ஆய்வு செய்தார்.

ஆய்வின்போது, பரிசல்களின் உறுதித் தன்மையை பரிசோதித்த ஆட்சியர், 6 மாதங்களுக்கு ஒருமுறை பரிசல்களை ஆய்வு செய்து அவற்றின் பின்புறத்தில் பூசப்பட்டுள்ள தார்க்கலவை பூச்சு வெயில் காரணமாக உருகி சிறு துளைகள் ஏற்பட்டுள்ளதா என்றும், அதன்மூலம் பரிசலுக்குள் தண்ணீர் புக வாய்ப்புள்ளதா என்றும் அறிந்து பழுதடைந்த பரிசல்களை சீரமைக்க உத்தரவிட வேண்டும் என்று அறிவுறுத்தினார். தொடர்ந்து, ஆண்கள் மற்றும் பெண்கள் உடை மாற்றும் இடங்களில் மேற்கொள்ளப்படும் தூய்மைப் பணிகள், பாதுகாப்பு அம்சங்கள் ஆகியவற்றையும் ஆய்வு செய்த ஆட்சியர், சுற்றுலாப் பயணிகளின் உடைமைகள் வைக்கும் பகுதியில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துவது தொடர்பாக அறிக்கை அளிக்க சுற்றுலா மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

ஆய்வின்போது, மாவட்ட உதவி சுற்றுலா அலுவலர் கதிரேசன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுருளிநாதன், ஷகிலா, மீன்வளத்துறை உதவி இயக்குநர் கோகுலகிருஷ்ணன், கூத்தப்பாடி ஊராட்சித் தலைவர் பாஸ்கர் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.





தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் சுற்றுலா தலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டு பணிகளை மாவட்ட ஆட்சியர் சாந்தி நேரில் ஆய்வு செய்தார்.

## சாலை விபத்தில் தொழிலாளி உயிரிழப்பு

● தருமபுரி

தருமபுரி மாவட்டம் பைசுஅள்ளியை சேர்ந்தவர் வெங்கடேசன் (32). இவர், மரம் உடைக்கும் டிராக்டர் வைத்துள்ளார். நேற்று இவர், டிராக்டரில் 6 தொழிலாளர்களை ஏற்றிக் கொண்டு தருமபுரியில் இருந்து நிம்மாங்கரை கிராமத்துக்கு சென்று கொண்டிருந்தார்.

தேசிய நெடுஞ்சாலையில் சவுளூர் பகுதியில் சென்று கொண்டிருந்த போது அவ்வழியாக வந்த டேங்கர் லாரி, டிராக்டர் மீது மோதியது. இந்த விபத்தில் டிராக்டர் கவிழ்ந்ததில் லளிகம் கிராமத்தைச் சேர்ந்த தொழிலாளி ரவி (44) உயிரிழந்தார். டிராக்டர் உரிமையாளர் வெங்கடேசன், தொழிலாளர்களான மல்லிக்குட்டை சண்முகம் (40), பாலமுருகன் (47), நிம்மாங்கரை திம்மராயன் (45), கல்கூடப்பட்டி மாணிக்கம் (46), பெரியாம்பட்டி சங்கர் (32) ஆகியோர் பலத்த காயமடைந்தனர். இந்த விபத்து குறித்து தருமபுரி நகரக் காவல் நிலைய போலீஸார் விசாரிக்கின்றனர்.

## சிக்கம்பட்டியில் மார்க்சிஸ்ட் கிளை மாநாடு

● அரூர்

தருமபுரி மாவட்டம் பொம்மிடி அருகே சிக்கம்பட்டியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை மாநாடு நடந்தது.

சந்தனூர் மேடு அடுத்த சிக்கம்பட்டியில் நடந்த இந்நிகழ்ச்சிக்கு நிர்வாகிகள் மாதையன், பழனிவேல் தலைமை வகித்தனர். கட்சிக் கொடியை நிர்வாகி தீர்த்தகிரி ஏற்றி வைத்தார். மாவட்ட செயற்குழு உறுப்பினர் மாரிமுத்து மாநாட்டை தொடங்கி வைத்தார். கிளை செயலாளர் நடராஜன் வேலை அறிக்கை மற்றும் வரவு-செலவு அறிக்கை அளித்தார்.

மாநாட்டில், குருமன்ஸ் பழங்குடியின மக்களுக்கு சாதிச் சான்றிதழ் கிடைக்காததால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகிறது. எனவே, கள ஆய்வு நடத்தி குருமன்ஸ் பழங்குடியின மக்களுக்கு பழங்குடியின சாதி சான்றிதழ் வழங்க வேண்டும். கிடப்பில் உள்ள காளிகரம்பு-மிட்டாரெட்டி அள்ளி இடையிலான தருமபுரியை இணைக்கும் சாலையை விரைந்து நிறைவேற்ற வேண்டும். சிக்கம்பட்டி பகுதியில் அனைவருக்கும் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கொண்டகரஅள்ளி, திப்பிரெட்டி அள்ளி, முத்தம்பட்டி ஆகிய கிராம ஊராட்சிகளை பாப்பிரெட்டிப்பட்டி வட்டத்தில் இணைத்து பொம்மிடியை புதிய ஒன்றியமாகதரம்உயர்த்தவேண்டும். பொம்மிடி காய்கறி மார்க்கெட்டில் விலைப்பட்டியல் வைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்த மாநாட்டில், வட்டக் குழு உறுப்பினர் கிருஷ்ணவேணி, வட்ட செயலாளர் தனுஷன், நிர்வாகிகள் தீர்த்தகிரி, கணேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.


**ஈரோடு மாநகராட்சி**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

ந.க. எண். எச்1 / 1114 / 2024. நாள் : 09.09.2024.

ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அல்லது அவரால் அங்கீகாரம் அளிக்கப்பட்டவரால் கீழ்கண்ட பணிகளுக்கு **E-Tendering** முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. மொத்த பணிகளின் எண்ணிக்கை - 8, இந்த பணிகளின் மொத்த மதிப்பீடு **ரூ.4,87,68,674/–** ஆகும். ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை **https://tntenders.gov.in** என்ற இணையதளங்களில் மட்டும் இலவசமாக எடுத்துக்கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விரவங்களையும் **(E-Mail Id: commr.erode@tn.gov.in Phone No.: 0424-2251616)** என்ற முகவரியில் பெறலாம்.

**ஒப்பந்தப்புள்ளி நேரம் மற்றும் நாள்:**

அ) ஒப்பந்தப்புள்ளி இறக்கம் செய்தல் : 12.09.2024 முதல் 27.09.2024 வரை (3.00 P.M.)
ஆ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் : 27.09.2024 மாலை 3.00 மணி வரை
இ) ஒப்பந்தப்புள்ளி திறத்தல் : **27.09.2024 மாலை 3.30 மணி**

ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின், அதற்கு அடுத்த வேலை நாளில், அதே நேரத்தில், அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு திறக்கப்படும்.

செ.ம.தொ.இ/3603/ஒப்பந்தப்புள்ளி/2024

ஆணையாளர்,
ஈரோடு மாநகராட்சி.



**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பேருந்து சாலைகள் துறை**

பே.சா.து.ந.க.எண்.பி3 / 3701 / 2024 (1 & 2) **குறுகிய கால மின்னணு ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு**

கண்காணிப்பு பொறியாளர் / பே.சா.து அவர்களால் கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

**மண்டலம் - 01 முதல் 15 வரையில் உள்ள உட்புற மற்றும் பேருந்து தட சாலைகளில் 7644 எண்ணிக்கையிலான சாலை பெயர் பலகைகளில் (Street Name Boards) அமைந்துள்ள பழைய பெயர் பலகைகளை நீக்கி புதிதாக டிஜிட்டல் பெயர் பலகைகளாக மாற்றி அமைக்கும் பணி.**

பணியின் உத்தேச தொகை குறைந்தபட்சம் **ரூ.736.00 லட்சம்,** அதிகபட்சம் **ரூ.762.00 லட்சம்**
முன்வைப்பு தொகை: மொத்த பணியின் உத்தேச தொகையில் 1%

**ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் 03.10.2024 அன்று மாலை 3.00 மணி வரை**
**ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம்: 04.10.2024 அன்று மாலை 3.30 மணி**

மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 3669 / ஒப்பந்தப்புள்ளி / 2024 **கண்காணிப்பு பொறியாளர் / பே.சா.து**



தமிழ்நாடு அரசு
**நெடுஞ்சாலைத்துறை**
கோயம்புத்தூர் கட்டுமானம் (ம) பராமரிப்பு வட்டம்

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 16/2024-25 / தவஅ / நாள் 07.09.2024

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ). க(ம)ப, கோயம்புத்தூர் வட்டம் அவர்களால், சி.ஆர்.ஐ.டி.பி 2024-25 ல் உள்ள **கோயம்புத்தூர் (நெ), க(ம)ப கோட்டம் - 1 பணி. பொள்ளாச்சி (நெ), க(ம)ப கோட்டம் - 1 பணி மற்றும் உதகமண்டலம் (நெ), க(ம)ப 1 பணிக்கு** - இணையவழியில் சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **08.10.2024 பிற்பகல் 3.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை https://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் 17.09.2024 முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புப்பொறியாளர் (நெ),
க(ம)ப கோயமுத்தூர் வட்டம்.

செ.ம.தொ.இ./3601/ஒப்பந்தப்புள்ளி/2024



தமிழ்நாடு அரசு
**நெடுஞ்சாலைத்துறை,**
**சென்னை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம்**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.19/2024–2025/தவஅ/ நாள் 05.09.2024

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, சென்னை வட்டம் அவர்களால் செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் (நெ) க(ம)ப கோட்டம் சார்ந்த CRIDP 2024-2025 **இணையவழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் 14.10.2024** பிற்பகல் **12.30** மணி வரை வரவேற்கப்படுகின்றன.

பணிகளின் விவரம், தோராயமதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் இதரவிபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **18.09.2024** முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புப்பொறியாளர் (நெ),
க(ம)ப சென்னை வட்டம்,

செ.ம.தொ.இ/3593/ஒப்பந்தப்புள்ளி/2024



தமிழ்நாடு அரசு
**நெடுஞ்சாலைத்துறை**
(கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சேலம்.

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 22 / 2024-25 / தவஅ, நாள்: 10.09.2024**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர், (நெ) க(ம)ப, சேலம் வட்டம் அவர்களால், **தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி (நெ) க(ம)ப கோட்டங்களைச்** சார்ந்த **2024-25 ஆண்டிற்கான இரண்டு சி.ஆர்.ஐ.டி.பி. பணிகள் (சிப்பம் 78 மற்றும் 79) மற்றும் இரண்டு திட்டம் சாரா பணி (சிப்பம் 80 மற்றும் 81) ஆகியவற்றிற்கு** இணையவழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **17.10.2024 - 15.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள், பெறப்படும் நாள் மற்றும் அனைத்து இதர விபரங்களை https://tntenders.gov.in என்ற அரசு இணையளத்தில் **16.09.2024** முதல் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புப் பொறியாளர்,
நெடுஞ்சாலை க(ம)ப வட்டம், சேலம்

செ.ம.தொ.இ./3622/ஒப்பந்தப்புள்ளி/2024



**வரி விளம்பரங்கள்**

**சுய செய்தி**

**பெயர்மாற்றம்**

**NAME CHANGE**

I, **SRIDHAR PERIASAMY,** Son of K. Periasami, born on 25-07-1981 (Place of Birth: SALEM) residing at D.No. 276, N.G.G.O Colony, Thathampatti Post, Salem-636 014, TamilNadu, India, shall henceforth be known as **SRIDHAR PERIASAMI**

SRIDHAR PERIASAMY

**பொது**

**விற்பனை**

**CCTV CAMERA**
எங்கிருந்தும் உங்கள் வீடு/ அலுவலகத்தை மொபைலில் பார்க்கலாம்





AN ISO 9001-2008 COMPANY
ஈஸிடெக் டிஜிட்டல் சொலிசன்ஸ்
இலவச டெமோவிற்கு அழைக்கவும்
74488 88904
95009 30200
www.easytechcctv.com



**ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்**
(ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்)

**பதிவு அலுவலகம்:** தி ஃபர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071.

**மின்-ஏலம் அறிவிப்பு**

**2002-ம் ஆண்டு (SARFAESI ACT) கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டத்தின் அமலாக்கம் மற்றும் 2002-ம் ஆண்டு (அமலாக்கம்) பாதுகாப்பு வட்டி விதிகள் 8(6) மற்றும் 9-ன் கீழ் மின்-ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான பொது அறிவிப்பு.**

கீழே கையொப்பமிட்ட **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் SARFAESI சட்டம் பிரிவு 13(4)ன் கீழ், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை தனது சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டார். இதன் மூலம் கடன்தாரர் குறிப்பாகவும், பொது மக்களுக்கும் அறிவிப்பதாவது, கீழ்க்கண்ட நபர்களிடமிருந்து, வங்கிக்கு செலுத்தவேண்டிய கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்குறிப்பிட்ட கணக்குகளின் அடமான சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு"** எனும் அடிப்படையில் **மின் ஏலத்தின் (e-auction)** மூலம் விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி கீழ்குறிப்பிட்ட நாட்களில் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | கடன் கணக்கு எண். | உண்மையான கடன்தாரர்/ இணை-கடன்தாரர்/ ஜாமீன்தாரர் பெயர் | 13-2 அறிவிப்பு நாள் | சுவாதீன நாள் | 03.09.2024-ன்படி தற்போதைய நிலுவை தொகை | சொத்தினை பார்வையிடும் நான் & நேரம் | ரிசர்வ் தொகை INR-ல் | முன்வைப்பு தொகை (EMD) INR-ல் | மின்-ஏலம் நாள் மற்றும் நேரம் | ஏலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள், நேரம் மற்றும் இடம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 31689420000202 & 31689420000280 | 1) திரு. சுரேஷ் திம்மப்பா, மேலும் : M/s. Suresh Allo Bricks, 2) திருமதி. கலாவதி சுரேஷ் | 18.07.2023 | 24.08.2024 | ரூ.22,07,029.46 (ரூபாய் இருபத்தி இரண்டு இலட்சத்து ஏழாயிரத்து இருபத்தி ஒன்பது மற்றும் பைசா நாற்பத்தி ஆறு மட்டும்) | 04.10.2024 நேரம் : காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை | ரூ.22,90,000/- (ரூபாய் இருபத்தி இரண்டு இலட்சத்து தொண்ணூறு ஆயிரம் மட்டும்) | ரூ.2,29,000/- (ரூபாய் இரண்டு இலட்சத்து இருபத்தி ஒன்பதாயிரம் மட்டும்) | 18.10.2024 @ மாலை 02.00 மணி | 16.10.2024, மாலை 5.00 மணிவரை, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், தலைமை அலுவலகம்: தி ஃபர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071. |

**அடமான சொத்துக்கள் விவரம்:** சானமாவு கிராமநத்தம் கிராமம், சூலகிரி தாலுகா மற்றும் கீழமங்களம் (தேன்கனிகோட்டை) சார் பதிவு மாவட்டம், கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம், சானமாவு கிராமம் நத்தம் சர்வே எண். 675, இதில் புதிய நத்தம் சர்வே எண். 675/28 (நத்தம் பட்டா எண். 141), இந்த சைட் அளவுகள் : கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு : 8.6 மீட்டர்கள், கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு : 9.2 மீட்டர்கள், வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு : 10.2 மீட்டர்கள், வடக்கிலிருந்து தெற்காக மேற்கு : 10.6 மீட்டர்கள் அதாவது ஏரியா 93 சதுர மீட்டர் அல்லது 1001 சதுர அடி அத்துடன் அதில் கட்டப்பட்ட ஆர்சிசி மாடி கட்டிடம் மற்றும் பின்வரும் **எல்லைகள் : கிழக்கு :** பெருமாள் அவர்களின் சொத்து, **மேற்கு :** சாலை, **வடக்கு :** சாலை, **தெற்கு :** சீனிவாசா அவர்களின் சொத்து.

மின் ஏலமானது **"உள்ள இடத்தில் உள்ளவாறு" & "உள்ளது உள்ளவாறு"** என்ற அடிப்படையில் **"ஆன்லைனில்"** நடத்தப்படும். மேலே கூறப்பட்ட சொத்தை வாங்குவது தொடர்பான அனைத்து தொகைகளும் **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்** பெயரில் வழங்க வேண்டும். வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குனர் நிறுவனத்தின் மூலம் இணையதள ஏற்பாட்டின் **M/s. 4 Closure** இணையதளம் **https://bankauctions.in & www.foreclosureindia.com** மூலம் ஏலம் நடத்தப்படும். மேலும் விபரங்களுக்கு, விதிகள் மற்றும் ஆன்லைன் மின-ஏல பயிற்சி, விற்பனை விதிகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய மின் ஏல டெண்டர் ஆவணம் ஆகிய தொடர்புக்கு **M/s. 4 Closure, தொடர்பு திரு.M.சீனிவாசுலு தொடர்பு எண். 8142000809. Email id: info@bankauctions.in / srinivas@bankauctions.in.**

மேலும் நிபந்தனை மற்றும் விதிகள் விபரங்களுக்கு, ஏல விபரங்கள் மற்றும் மற்ற சொத்தின் வினாக்களுக்கு **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் அதிகாரிகள் திரு. ரஞ்சன் நாயக் (மொபைல் எண். 6362951653), திரு. உமேஷ் (மொபைல் எண்.8050149617) மற்றும் திருமதி. சைதா (மொபைல் எண். 7400445147)** தொடர்பு கொள்ளவும். அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்குத் தெரிந்த வரையில் சொத்துக்களின் மீது எந்த வில்லங்கங்களும் இல்லை, எனினும் ஏலத்தில் விடப்படும் சொத்துக்கள் விஷயமாக வில்லங்கங்கள் இதன் உரிமை குறித்து ஆர்வமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் சொந்தமாக விசாரித்து அறிந்துகொள்வது அவசியம். இந்த அறிவிப்பானது மேற்குறிப்பிட்ட கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் அடமான சொத்துக்களின் மின்-ஏலம் அட்டவணை அறிந்து கொள்ள அறிவிப்பாகும். கடன்தாரர்/ஜாமீன்தாரர்/அடமானதாரர் மின் ஏலம் நாளுக்கு முன் மேற்குறிப்பிட்ட தொகை அத்துடன் வட்டி மற்றும் மற்ற செலவினங்களுடன் செலுத்தலாம், தவறினால் சொத்தானது விற்பனை செய்யப்படும் மற்றும் ஏதேனும் நிலுவை இருந்தால் வட்டி மற்றும் கட்டணங்களுடன் வசூலிக்கப்படும்.

**நாள் : 12.09.2024, இடம் : கிருஷ்ணகிரி** **Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்**


அரசியல் கட்சிகள், சங்கங்கள், சமூக அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகள் தங்களது செய்தி அறிக்கைகள், நிகழ்ச்சிகள் குறித்த விவரங்களை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் வழியாக அனுப்பலாம்.

மின்னஞ்சல் முகவரி: repsalem@hindutamil.co.in


இந்து தமிழ் திசை

**பொறுப்பல்ல:** இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திருப்ப அனுப்ப இயலாது.



**ESAF**
ESAF CO-OPERATIVE

**ESAF SWASRAYA MULTI STATE AGRO COOPERATIVE SOCIETY LIMITED**
Registered under Multi-State Cooperative Society Act,2002 as per Regn.No. MSCS/CR/442/2011
Regd. Office: First Floor, JSR Square, Kalathode, Thrissur, Kerala – 680655. Tel : 0487-2375776
Email: communications@esafcooperative.com Website: www.esafcooperative.in

**NOTICE**

NOTICE is hereby given that the 13th Annual General Body Meeting of ESAF Swasraya Multi-State Agro Cooperative Society Limited will be held at Regency Club Convention Centre, Kuttanellur, Thrissur, Kerala-680014 on Saturday, 28th of September 2024 at 11 AM to consider the under noted Agenda.

**AGENDA**

1.Prayer. 2. Welcome Address. 3. Chairperson's Speech. 4. Approval of the Minutes of the previous Annual General Body Meeting. 5. To consider the Audited financial statements as of 31st March 2024. 6. To consider the Auditor's Report, Audit Compliance Report and Annual Report. 7. Review of Operational deficit, if any. 8. Creation of specific reserves and other funds. 9. Approval of the Annual Budget. 10. Review of the utilization of Reserves and other Funds. 11. Approval of the long-term perspective plan and the annual operational plan. 12. Review of the Annual Reports and accounts of subsidiary institutions. 13. Expulsion of members, if any. 14. Amendments to the Bye-laws of the Society (In view of the MSCS (Amendment) Act & Rules 2023 notified vide Gazette Notification dated 03/08/2023 and 04/08/2023 respectively, and Central Registrar Circular No.L-11012/06/2023- L&M dated 16/10/2023 and 05/02/2024). 15. Review of the Code of Conduct for the members of the Board and Officers. 16. Election of members of the Board, if any. 17. Review of the list of employees who are relatives of the members of the Board and Chief Executive. 18. Appointment of Auditors, as per the MSCS (Amendment) Act, 2023, for the year 2024-25 and to fix their remuneration. 19. Details to be disclosed under Section 39(3) of the Act, if any. 20. Any other matters allowed by the Chairperson. 21. Questions and Answers. 22. Vote of Thanks.

Place: Thrissur
Date: 10-09-2024

BY ORDER OF THE BOARD
SALEENA GEORGE
CHAIRPERSON


எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 and Printed by C.Sridhar at Plot No. 13-D, Bommasandra-Jigani Link Road, KIADB Industrial Area, Bommasandra, Anekal Taluk, Bengaluru -560099 on behalf of KSL MEDIA LIMITED, Chennai-600002. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).